பக்கங்கள் 18+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 07 திங்கட்கிழமை 19.02.2024 அதிர்வு 203

## மகனைச் சுத்தியலினால் தாக்கி கொலை செய்த தந்தை கைது!

போதைப்பொருள் பாவனைக்காக பணம் கேட்டு தனது தந்தையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட மகனை சுத்தியலால் தாக்கி கொலை செய்த தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

04▸




# மன்னார் நொச்சிக்குளத்தில் மீண்டும் இன்று துவக்குச் சூடு

## கிராம மக்கள் அல்லோலகல்லோலம் வீதியை மறித்து அவர்கள் போராட்டம்



(மன்னார் நிருபர்)

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் இன்று மீண்டும் கிராம மக்களை இலக்கு வைத்து இயந்திரத் துப்பாக்கி மூலம் வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

அதனால் அல்லோலகல்லோலப் பட்ட கிராம மக்கள் இத்தகைய துப்பாக்கிச் சூடுகளைத் தடுத்து நிறுத்தக் கோரியும் தங்களுக்குப் பாதுகாப்புத் தரக் கேட்டும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

04▸

# செங்கலடியில் இரண்டு சவப்பெட்டிகளுடன் 2 இளைஞர்கள் சாகும் வரை உண்ணாவிரம்

## வியாழேந்திரனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து



இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகமல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், செங்கலடி பிரதேச செயலாளரும் சட்டப்படி தமது கடமைகளைப் புரிய வேண்டும் எனக் கோரி சவப்பெட்டிகளுடன் அமர்ந்து இரு இளைஞர்கள் சாகும் வரை உண்ணாவிரதத்தை செங்கலடி பிரதேச செயலகம் அருகில் ஆரம்பித்துள்ளனர்.

கல், மண், கிறவல் என்பவற்றுக்கு சட்டப்படியான ஆவணம் இருந்தும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் சிபாரிசு செய்யும் நபர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கும் நடைமுறைக்கு எதிர்ப்பு

04▸



# பெண் அதிபர் நியமனத்துக்கு எதிராக யாழ். மத்திய கல்லூரியில் போராட்டம்

**(பிரபாகரன் டிலக்சன், நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிதாகப் பெண் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றைய தினம் ஆட்சேபனை அடையாள போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


இன்று காலை 7:30 மணிக்கு கல்லூரிக்கு முன்பாக மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிக்காத வகையில் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


208 ஆண்டுகளைக் கடந்த பாரம்பரியமிக்க ஓர் ஆண்கள் பாடசாலையில் முதல் முறையாக பெண் அதிபரை நியமிப்பதற்கு ஆட்சேபனை செய்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு கல்லூரியின் அதிபராக செயற்பட்ட எஸ்.இந்திரகுமாரை மீண்டும் நியமிக்குமாறு மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர் என்று கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வை விரைவில் பெற்றுத்தருவார் எனக் கடற்றொழில் அமைச்சரும், கல்லூரியின் பழைய மாணவருமான டக்ளஸ் தேவானந்தா உறுதி வழங்கினார் எனப் பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.








# வலி. வடக்கில் படைக் கட்டுப்பாட்டில் உள்ள ஏழு ஆலயங்களுக்குச் சென்று வர அனுமதி!

(ந.லோகதயாளன்)

வலி. வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களிற்கு சென்று வருவதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக மாவட்ட அரச அதிபர் அ.சிவபாதசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதியில் தற்போதும் படையினர் வசம் உள்ள நிலப் பிரதேசத்திற்குள் இருக்கும் 21 மத வழிபாட்டு இடங்களுக்கும் நித்திய பூசை வழிபாட்டிற்குச் சென்றுவர அனுமதிக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள், மதப் பெரியார்கள், ஆலய நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

“இது தொடர்பில் நாம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக 21 ஆலயங்களிலே 7 ஆலயங்களிற்கு முதல் கட்டமாக சென்று வருவதற்கு படையினரின் அனுமதி கிடைத்துள்ளது. இதிலே 6 சைவ ஆலயங்களும் ஓர் கத்தோலிக்க தேவாலயமும் அடங்குகின்றன. இந்த ஆலயங்களில் சைவ ஆலயங்களிற்கு வாராந்தம் வெள்ளிக் கிழமைகளிலும் கத்தோலிக்க ஆலயத்திற்கு ஞாயிற்றுக் கிழமைகளிலும் சென்றுவர முடியும்.

“வலி. வடக்கில் உள்ள ஆலயங்களிற்கு செல்ல விரும்பும் பக்தர்கள், நிர்வாகத்தினர் ஒரு நாளிற்கு முன்னதாக தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் தமது அடையாள அட்டையைக் காண்பித்து பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் இடையூறுகள் அற்ற பயணத்தை மேற்கொள்ள முடியும்” என்றார் யாழ். அரச அதிபர்.



# மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் யாழ் சிவில் சமூகத்தினருடன் சந்திப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கும் வடக்கு மாகாணத்தில் உள்ள சிவில் சமூக அமைப்பினுடைய பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு இன்று இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள திருமறை கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியில் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி.தெஹிதெனிய, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் , வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம், கடற்றொழில் அமைப்புக்கள் உட்பட பல சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சிவில் சமூகத்தினர் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.





# மலையகத்தில் பத்தாயிரம் இந்திய வீட்டுத் திட்டம் எமது ஆட்சியில் அறிவிக்கப்பட்டு இன்று ஆரம்பம்

## மனோ கணேசன் வாழ்த்து; நிலம் எத்தனை பேர்ச் அளவு என்று கேள்வி

2017 ஆம் ஆண்டு, எமது ஆட்சியின் போது மலையகத்துக்கு எமது அரசாங்கத்தால் அழைத்து வரப்பட்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பெருந்தோட்டங்களில் கட்டப்படும் இந்திய வீடமைப்பு திட்ட வீடுகளின் தொகையை மேலும் பத்தாயிரத்தால் அதிகரிப்பதாக அறிவித்தார். எமது ஆட்சி 2019ல் முடிவுக்கு வந்ததால், எம்மால் அதை தொடர முடியவில்லை. இன்று அந்த வீடமைப்பு திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை அறிந்து, அதை வாழ்த்தி வரவேற்கின்றோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

பெருந்தோட்டங்களில் கட்டப்படும் வீடமைப்பு திட்ட வீடுகளின் காணி விஸ்தீரணம், எமது ஆட்சியில் 7 பேர்ச் என அமைச்சரவை பத்திரம் மூலம்



உறுதி செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பை ஏற்ற, இந்த அரசாங்கம் 20 பேர்ச்சில் பெருந்தோட்டங்களில் வீடு கட்டி தருவதாக கூறியது. பின்னர் கடந்த வரவு - செலவு திட்டத்தின் போது 10 பேர்சில் பெருந்தோட்டங்களில் வீடமைப்பு என்று கூறியது.

ஆகவே, இன்று ஆரம்பிக்கப்படும் இந்திய வீடமைப்பு திட்ட வீட்டு காணிகளின் விஸ்தீரணம் பற்றிய ஒரு தெளிவின்மை மக்கள் மத்தியில் இருக்கின்றது. இன்று ஆரம்பிக்கப்படும் திட்டத்தில் கட்டப்படும் வீட்டு காணி விஸ்தீரணம், ஏழு பேர்ச்சா, பத்து பேர்ச்சா, இருபது பேர்ச்சா என்ற விவரத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். காணி விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டிருக்குமானால், அவை இந்த அரசினால் 10 பேர்ச் அல்லது 20 பேர்ச் என்ற அளவுகளுக்கு அமைச்சரவை பத்திரம் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறோம்.

காணி விஸ்தீரணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் நாம் பெருமகிழ்ச்சி அடைவோம். எப்படியும், 2017 ஆம் ஆண்டு, எமது ஆட்சியின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியால் பத்தாயிரம் இந்திய வீடமைப்பு திட்டம், இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை அறிந்து, அதை இதயபூர்வமாக வாழ்த்தி வரவேற்கின்றோம். - என்று உள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### செங்கலடியில்...

தெரிவித்தும், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனை ஏறாவூர்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவியில் இருந்து அகற்றுமாறு கோரியும் இப்போராட்டம் நடைபெறுகிறது.

### மன்னார் நொச்சிக்குளத்தில்...

மன்னார் உயிலங்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற துவக்குச் சூட்டு சம்பவம் ஒன்றைத் தொடர்ந்தே இன்று திங்கட்கிழமை காலை மன்னார் - மதவாச்சி பிரதான வீதியை நொச்சிக்குளம் பகுதியில் மறித்து மக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது:-

இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் நொச்சிக்குளத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி தனது கிராமத்தில் உள்ள தனது வயலில் நீர்பாய்ச்சிக் கொண்டு இருந்த வேளையில் ஒரு மோட்டர் சைக்கிளில் வந்த இரு நபர்கள் இயந்திரத் துப்பாக்கி மூலம் அந்த விவசாயியை இலக்கு வைத்துத் திடீரெனச் சுட்டனர். எனினும் தெய்வாதீனமாக அவர் மயிரிழையில் உயிர் தப்பினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில காலமாக இந்தக் கிராமத்து மக்களின் மீது ஒரு குழுவினர் திடீர்த் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும், அத்தகைய தாக்குதல்களில் இது வரை மூவர் இறந்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்தக் கிராமத்துக்கு பொலிஸ் காவல் போடப்பட்டும் அதையும் மீறி கொலை கலாச்சாரம் தொடர்வதாக தெரிவித்தே இன்றைய நாளில் கிராம மக்கள் கையில் பதாதைகள் ஏந்தி வீதி மறியல் போராட்டத்தில் இறங்கியிருந்தனர்.

அவர்கள் ஏந்தியிருந்த பதாதைகளில் 'கொலைகாரர்களுக்கு ஆயுதம் கொடுத்தது யார்?', 'எங்களை பாதுகாப்பது அரசின் கடமை', 'எங்கள் உயிருக்குப் பாதுகாப்பு தாருங்கள்', 'எங்கள் மக்களுக்கு நீதி இல்லையா? யார் தருவது?' போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

கொலையில் ஈடுபடும் நபர்கள் இனம் காட்டப்பட்டும் சட்டத்திலிருந்து அவர்கள் தப்பித்து வருவதால் ஒரு கிராமம் தொடர்ந்து அல்லோலகல்லோலப் படுகின்றது எனக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இத்துவக்குச் சூட்டு சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இனம் காட்டப்பட்டனர் எனப் பாதிப்படைந்தவர்கள் தெரிவித்தும் நிற்கின்றனர்.

அண்மையில் மன்னார் முள்ளிக்கண்டல் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் முள்ளிக்கண்டல் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவருடன் நெருங்கிய நபர்மீதே இன்றைய தினம் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தற்பொழுது உயிலங்குளம் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்

இந்த துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் மேற்கொண்டு தப்பி சென்ற சந்தேக நபர்களைத் தேடிவருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

### மகனைச் சுத்தியலினால்...

இந்த சம்பவம் கும்புக்கெட்டிய, வெல்கல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 30 வயதுடைய போதைப்பொருளுக்கு அடிமையான ஒருவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் போதைப்பொருள் பாவனைக்காக பணம் கேட்டு தனது தந்தையுடன் தினமும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்தார் எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவர் நேற்று வழமைப்போல போதைப்பொருள் பாவனைக்காக பணம் கேட்டு தனது தந்தையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் தந்தை, தனது மகனை சுத்தியலால் தாக்கி கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான 60 வயதுடைய தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர் .

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கும்புக்கெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊழல் புரிந்தோரைக் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு பின்நிற்கும் நாடு இலங்கை!

## வெரிட்டே ஆய்வின் புதிய அறிக்கை தகவல்

பொதுக் கொள்வனவுகளில் ஊழல் புரிந்தவர்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதில் தெற்காசிய நாடுகளில் மிக மோசமான பதிவை இலங்கை கொண்டுள்ளது என்று வெரிட்டே ஆய்வின் புதிய அறிக்கை தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

கொள்முதலின் போது ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பது என்பதை அங்கீகரிக்காத தெற்காசியாவில் உள்ள ஒரே நாடு இலங்கை மட்டுமே என்றும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

எனினும், மருந்துக் கொள்வனவு போன்ற சில நிகழ்வுகளைத் தவிர இலங்கையில் ஏறக்குறைய அனைத்து பொதுக் கொள்வனவுகளையும் நிர்வகிக்கும் 2006 ஆம் ஆண்டின் கொள்முதல் வழிகாட்டுதல்களில் பெரிய இடைவெளிகள் உள்ளன.

ஊழலை எதிர்த்து நிதி நிர்வாகத்தை மீட்டெடுக்க இந்த இடைவெளிகளை அவசரமாகச் சரிசெய்வதன் முக்கியத்துவத்தை ஆய்வு அறிக்கை வலியுறுத்துகிறது.

கடனைக் கட்டத் தவறிய ஒப்பந்தக்காரர்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பது மட்டுமல்லாமல், அவர்களின் பெயர்களைப் பொது இணையத்தள தரவுத் தளத்தில் வெளியிடவும் இலங்கையில் ஏற்பாடுகள் உள்ளன.

இருப்பினும், அரச துறையால் பராமரிக்கப்படும் இந்தத் தரவுத் தளத்தில் எவ்வித பதிவுகளும் இல்லை. இதற்கு நேர்மாறாக, ஜூலை 2023 நிலவரப்படி, நேபாளத்தின் இணைத்தள தரவுத் தளத்தில் 629 உள்ளீடுகளும், பங்களாதேசில் 510 பதிவுகளும் இருந்ததாக வெரிட் ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் இலங்கை மீதான சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகை கண்டறிதலின் கொள்வனவுகளில் உயர் மட்ட ஊழல்கள் சரிசெய்வதன் முக்கியத்துவம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளமையை, வெரிட் ஆய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.



## இணைந்த கரங்கள் அமைப்பினரால்

# கிளிநொச்சி விவேகானந்தா வித்தி. மாணவருக்குக் கற்றல் உபகரணம்!

(நூருல் ஹுதா உமர் )

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இன்று பாடசாலை அதிபர் ஜெயலட்சுமி மாணிக்கவாசகம் தலைமையில் பாடசாலையின் மண்டபத்தில் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப் பட்டன.

இந்த நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான எல். கஜரூபன், எம். காந்தன், ஆர். ஜெகனாதன், ஆஸ்ரேலியாவில் இருந்து வருகைதந்த தி. ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

இந்தப் பாடசாலை தேசிய சுற்றாடலுக்கான “சுவசர தக்சலாவ” ஜனாதிபதி விருதைத் தொடர்ச்சியாக 2015, 2016, 2017 என மூன்று முறை பெற்றுள்ளது. பொலித்தீன் அற்ற பாடசாலையாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# காணாமல் போன கிணறு

தமிழ்த் திரைப்படம் ஒன்றில் நடிகர் வடிவேல் தாம் கட்டிய வட்டக் கிணறு, வற்றாத கிணறு காணாமல் போய்விட்டதாகப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்வார். கிணறு காணாமல் போன முறைபாட்டை ஒட்டிய வடிவேலுவின் அலப்பறை தாங்காமல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே தமது சீருடைகளைக் கழற்றிக் கொடுத்துவிட்டு பொலிஸ் பணியில் இருந்தே ஓடித் தப்ப முயல்வார்.

அப்படிக் கிணறு காணாமல் போனமை போன்ற கதை ஒன்று இலங்கையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற மிகப்பெரிய ஊழலான சீனி வரி விலக்கு அறிவிப்பு மோசடியை ஒட்டிக் கட்டவிழ்ந்திருக்கின்றது.

இந்த ஊழல் ஜனாதிபதி கோட்டாபயவின் பதவி காலத்தில், நிதி அமைச்சராக அவரின் சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ இருந்த போது இடம் பெற்றது.

2020 ஒக்டோபரில் சீனிக்கு விசேட பாவனைப் பொருள் வரியாக கிலோவுக்கு 50 ரூபா அறவிடப்பட்டு வந்தது. திடீரென ஒக்டோபர் 13 ஆம் திகதி 2197/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த 50 ரூபா வரி வெறும் 25 சதமாக - 99.5 வீதம் அதிரடியாகக் குறைத்து - அறிவிக்கப்பட்டது.

சீனிக்கான வரிக் கட்டணம் குறைக்கப்பட்ட போதும் சீனி விற்பனை விலையைக் குறைக்கும் வர்த்தமானி அறிவித்தலோ விலை நிர்ணயப் பிரகடனமோ வெளியிடப்படவில்லை.

2020 ஒக்டோபர் 14ஆம் திகதி முதல் 2021 பெப்ரவரி 8 ஆம் திகதி வரை பெருமளவு சீனியை இறக்குமதி செய்து தள்ளிய அரசுத் தலைமைக்கு வேண்டிய தரப்புகள் அந்த சீனிக்கு அதுவரை அரசுக்குச் செலுத்தி வந்த ஐம்பது ரூபா வரியைத் தாமே சுருட்டி கொண்டனர்.

சீனிக்கான வரியை வெட்டிக் குறைத்த அதேசமயம், சந்தையில் பொது மக்களுக்கு வழங்கப்படும் சீனியின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்காதமை மூலம் அரசுக்கு 1,676 கோடி ரூபா வரி இழப்பு இந்த நான்கு மாதங்களில் ஏற்பட்டிருப்பதாக, பின்னரான சட்ட ரீதியான கணக்காய்வுகள் உறுதிப்படுத்தின. அதாவது வழமையாக வரி மூலம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய இந்த 1,676 கோடி ரூபாவை சீனி இறக்குமதியாளர்களே நேரடியாகச் சுவாஹா செய்துவிட்டனர்.

ஆனால் இப்படி சில சீனி இறக்குமதியாளர்கள் ஆட்டையப் போட்ட 1,676 கோடி ரூபாவை காலம் தாழ்த்தியேனும் மீட்டெடுக்கும் முயற்சியை அரசு செய்யவில்லை என்றும், இந்தப் பெரிய அளவிலான ஊழலை மூடி மறைப்பதிலேயே தொடர்ந்து வந்த அரசுத் தலைமைகள் தீவிரமாக இருக்கின்றன எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

வடிவேலு தாம் கட்டிய வட்டக் கிணறு - வற்றாத கிணறு காணாமல் போய்விட்டதாகக் கூறுவது போன்று இந்த சீனி விலைக் குறைப்பு விடயத்தினால் அரசுக்குச் சட்ட ரீதியான இழப்பு ஒன்றும் ஏற்படவே இல்லை என்று வர்த்தக, முதலீட்டுக் கொள்கை அமைச்சின் திணைக்களம் ஓர் அறிவிப்பு மூலம் புதுக்கதை விடுத்திருக்கின்றது. இந்த ஊழல் சர்ச்சை விடயத்தில் இந்த அறிவிப்பு அதிர்ச்சி தரும் திருப்புமுனை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் திணைக்களத் தகவல் அதிகாரி டி.எம்.ஏ.தஸநாயக்க 2016 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளித்த பதில் ஒன்றிலேயே இப்படி சீனி விலைக் குறைப்பினால் அரசுக்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்ற புதுக் கதையை அவிழ்த்துவிட்டிருக்கின்றார்.

இந்த ஊழல் மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வு விசாரணைகளை ஆரம்பிக்கும்படி பொலிஸாருக்கு சட்டமா அதிபர் பரிந்துரை வழங்கியுள்ள சூழலில் - பின்னணியில் - அத்தகைய வரிக் குறைப்பினால் அரசுக்கு வரியிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்று நிதி அமைச்சின் அதிகார வர்க்கம் சமாளிப்புச் செய்ய முற்படுவது குறித்து பல தரப்புக்களும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் வெளியிட்டுள்ளன.

இந்த ஊழலினால் ஏற்பட்ட வரி இழப்பை, அதைப் பணமாக்கி சூறையாடிவிட்ட இறக்குமதியாளர்களிடம் இருந்து காலம் தாழ்த்தியேனும் அறவிடுவதில் என்ன சிக்கல் இருக்கின்றது என மேற்படி நிதி அமைச்சின் தகவல் அதிகாரியிடம் வினவப்பட்ட போது, இந்த விடயத்தில் வரி இழப்பு ஏற்பட்டதாகக் கணக்கிடப்படாத நிலையில், அப்படி வரிநிலுவை என எதையும் அறவிடுவது என்ற கேள்வியே எழவில்லை என அவர் சமாதானம் கூறியிருக்கின்றார்.

கட்டிய கிணறு காணாமல் போனதாக முறைப்பாடு செய்யும் அளவுக்கு அரச நிர்வாகக் கட்டமைப்பு மோசமாக இருக்கும் போது, நாட்டை நிமிர்த்தித் தூக்கி நிறுத்துவது என்பது சாத்தியப்படப் போவதில்லை.





# சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கு வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு!

## மருத்துவ தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் டாக்டர் சமால் சஞ்சீவ தெரிவிப்பு

இலங்கையின் வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கு பாரிய அளவில் தட்டுப்பாடு நிலவி வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவ தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் நிபுணத்துவ மருத்துவர் சமால் சஞ்சீவ இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் சத்திர சிகிச்சை உபகரண பட்டியலின் முன்னுரிமை அடிப்படையில் சுமார் 3 ஆயிரத்து 800 உபகரணங்கள் தட்டுப்பாடாகக் காணப்படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மொத்தமாக 5 ஆயிரத்து 800 உபகரணங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலைமைக்கு இன்னும் இரண்டு மூன்று வாரங்களுக்குள் தீர்வு காணப்படாவிட்டால் வைத்தியசாலைக் கட்டமைப்பில் நெருக்கடி நிலைமை ஏற்படலாம் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதயத்துக்குப் பயன்படுத்தப்படும் ஸ்ட்ரென்த் வகைகள், கண்களுக்கு பயன்படுத்தப்படும் லென்ஸ் வகைகள், கண் சத்திர சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள், அவசர சிகிச்சை பிரிவில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருள்கள் இவ்வாறு தட்டுப்பாடாக காணப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கூடுதல் விலைக்கு மருந்துப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து விலகி ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், அவருடன் தொடர்பு பேணிய அதிகாரிகள் அந்தந்தப் பதவிகளில் நீடித்து வருவதால் மோசடிகள் முழுமையாக இல்லாது ஒழிக்கப்படவில்லை என்று டாக்டர் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இந்த ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளை நீக்குவதற்குத் தற்போதைய சுகாதார அமைச்சர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# பணமோசடிகள் செய்த இலங்கையர் மாலைதீவில் வைத்துக் கைதானார்!

மாணிக்கக்கல் வியாபாரிகள் உட்பட பல்வேறு நபர்களை ஏமாற்றி சுற்றுலா விசாவில் மாலைத்தீவுக்குத் தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த இலங்கையர் ஒருவர் மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்குக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் சிவப்பு அறிவித்தல் விடுத்திருந்தது. இந்த நிலையில், அவர் நாடு கடத்தப்பட்டதன் பின்னர் மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் தம்மிடம் பெறுமதியான இரத்தினக் கற்கள் இருப்பதாகக் கூறி அவற்றை முதலீட்டுக்குக் கொடுத்து மாணிக்கக்கல் வியாபாரிகளிடம் இருந்து இருநூறு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்து மாலைத்தீவுக்குத் தப்பியோடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப்பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகளின் பிரகாரம் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் இந்தோ - பசுபிக் மூலோபாயம்; இலங்கை மீண்டு எழுவதற்குக் காரணமாகியது!

## அந்த நாட்டின் தென்னாசியா, மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு தெரிவிப்பு



இந்தியா போன்ற நட்பு நாடுகளுடன் இணைந்து அமெரிக்கா முன்னெடுத்த இந்தோ பசுபிக் மூலோபாயம் வெற்றி பெற்றுள்ளமைக்கு உதாரணம் இலங்கைதான் என்று அமெரிக்காவின் தென்னாசியா மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றரை வருடகாலத்திற்கு முன்னர் இலங்கை நெருக்கடியில் சிக்குண்டிருந்தது, வீதியில் பெரும் கலவரங்கள் ஏற்பட்டன, பெட்ரோல் மற்றும் உணவுக்காக மக்கள் வீதிகளில் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர், ஜனாதிபதியின் இல்லம் கைப்பற்றப்பட்டது, ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரின் நீச்சல்தடாகத்தில் நீந்தினர்.

ஆனால் சமீபத்தில் இலங்கைக்கு சென்றிருந்தீர்கள் என்றால் தற்போது முற்றிலும் வித்தியாசமான இடமாக காணப்படுகின்றது.

இலங்கையின் நாணயம் ஸ்திரமான நிலையில் காணப்படுகிறது. பொருள்கள், எரிபொருள்களின் விலைகள் ஸ்திரமானதாகக் காணப்படுகின்றன.

கடன் மறுசீரமைப்பு குறித்த உத்தரவாதங்கள் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. சர்வதேச நாணயநிதியத்தின் நிதி கிடைக்கின்றது.

இது எப்படி நடந்தது ? நண்பர்களின் சிறிய உதவியுடனேயே இது சாத்தியமானது. அமெரிக்காவும் அதன் சகாக்களும் சிறந்த திட்டங்களை முன்வைத்தனர். இதனை அடிப்படையாக கொண்டு இலங்கை மீண்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை நெருக்கடியின் ஆரம்பத்தில் அந்த நாட்டுக்கு தேவைப்பட்டது மனிதாபிமான உதவிதான்.


இந்தியா போன்ற நாடுகள் சலுகைக் கடன்களை வழங்குவதை நாங்கள் பார்த்தோம், இவை இலங்கை மிகவும் நெருக்கடியான தருணத்தில் அத்தியாவசிய பொருள்களைப் பெற்றுக் கொள்ள உதவியது.

யு.எஸ்.எயிட். இந்த நெருக்கடியான தருணத்தில் விவசாய உற்பத்திக்கான பொருள்களுக்காக மில்லியன் டொலர்களை வழங்கியது.

கடனைப் பொறுத்தவரை ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் தலைமையிலான நாடுகள் இலங்கை தனது கடன் மறுசீரமைப்பை பேண்தகு முறையில் முன்னெடுப்பதற்கு அனுமதிப்பதற்கான திட்டத்தை உருவாக்குவதற்கான பேச்சுகளில் பல மாதங்கள் ஈடுபட்டன.

சீனாவின் இந்தத் திட்டம் கடன் உத்தரவாதங்களுடன் இணங்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வருகைக்கான சூழ்நிலையை உருவாக்கியது. இதுவே இன்று இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியது.– என்றார்.





# ‘குடு சலிந்து’வின் உதவியாளரான பெண் நேற்று பொலிஸாரால் கைது!

பிரபல பாதாள உலக பிரமுகரும் போதைப் பொருள் கடத்தல்காரருமான ‘குடு சலிந்து’வின் உதவியாளரான பெண் ஒருவர் நேற்று வலான தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண், டுபாயில் உள்ள ‘குடு சலிந்து’ என்றழைக்கப்படும் சலிந்து மல்சிக்க குணரத்னவின் போதைப்பொருள் கடத்தலை நடத்தி வந்துள்ளார் என்று கூறப்படும் அசித என்பவரின் மைத்துனி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

‘பட்டா’ என்ற பெயரால் அழைக்கப்பட்டு வரும் குறித்த பெண், 10 கிராம் ஹெரோயின் போதைப் பொருள், 2 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்துடன் பாணந்துறையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ‘பட்டா’ க்கு தற்போது மேலும் இரண்டு நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, அவரது சகோதரி மற்றும் தந்தை போதைப்பொருள் குற்றச்சாட்டில் தற்போது பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# போதைப் பொருள் பாவனையை தடுப்பது தொடர்பில் விழிப்புணர்வு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய ஏற்பாட்டில், போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் குற்றச் செயல்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது தொடர்பான சமூக மட்டத்தில் உள்ள பல்வேறு தரப்பினருடனான விழிப்புணர்வுக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (18) மாலை கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது கல்முனை பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியும் விசேட அதிதியாக கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.எம்.லசந்த புத்திகவும் கலந்து கொண்டனர்.

இதன் போது நிகழ்வு பொது மத அனுஸ்டானத்துடன் ஆரம்பமாகியது. வரவேற்புரையைக் கல்முனை பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான ஏ. எல் ஏ. வாஹிட் நிகழ்த்தினார்.

இந்தக் கலந்துரையாடலின் பிரதான வளவாளராக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம். எம். ஜி. பி. எம். றஸாட் கலந்து கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சமூக பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனைகள், சிவில் குற்றங்கள், முரண்பாடு, குடும்ப பிரச்சினைகள் போன்ற பல்வேறுபட்ட தலைப்புக்களை அடிப்படையாக கொண்டு கூட்டத்தில் கலந்து கொண்ட பல தரப்பினரிடம் கலந்துரையாடப்பட்டது.

சமூக பாதுகாப்பு நிறுவனமான குடும்பம், பாடசாலை, சமய நிறுவனம், சமூக அமைப்பு நிறுவனத்தின் வகிபாகம், ஏதிர்காலத்தில் சமூகத்துக்கும் பொலிஸ் பாதுகாப்பு இடையிலான சமூக இடை வெளியை அதிகரித்தல், பாடசாலை மாணவ, மாணவிகள் ஒழுக்கம், வீதி போக்குவரத்து விதி முறை தெளிவுபடுத்தல், சமூக பாதுகாப்பினை மேன்படுத்துவதற்கு விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்துதல், சமூக சேவை திட்டங்கள், பொது சிரமதான பணிகள் நடைமுறைப்படுத்தல் போன்ற தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன.











## தலை மன்னாரில் சிறுமி வன்புணர்ந்து கொலை:

# மன்னார் நீதிமன்ற பிரதான வீதியில் மக்கள் இன்று அமைதிப் போராட்டம்!

(மன்னார் நிருபர்)

தலை மன்னார் ஊர்மனை கிராமம் பகுதியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி இன்று திங்கட்கிழமை (19) காலை மன்னார் நீதிவான் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாகக் கிராம மக்கள் அமைதி வழிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சிறுமியின் மரணத்துக்குத் தாமதம் இன்றி நீதி கிடைக்க வேண்டும் என்று கோரியும் விசேட நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று இந்த வழக்கை விசாரிக்கக்க கோரியும் தலை மன்னார் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரை குறித்த அமைதிப் போராட்டம் இடம் பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்கு, விசேட விசாரணை பொலிஸ் குழுவை நியமி, சிறுவர்களை உயிர் போல் காப்போம், இணையவழிப் பாலியல் துஸ்பிரயோகங்களை நிறுத்துங்கள், எமது சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் அதே நேரம் சிறுமியின் புகைப்படத்தையும் ஏந்தியவாறு அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.










# யானை - மனித மோதல்கள் தொடர்பில் அம்பாந்தோட்டையில் கலந்துரையாடல்

## உள்ளூர் சமூகத்துக்கான விழிப்புணர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஹபரத்தவெல கிராம மக்கள் காட்டு யானைகளின் தொல்லையால் பல உயிர்களைக் காவு கொடுத்துள்ளனர். உடமைகளையும் பலன் தரும் பயிர்களையும், குடி யிருப்புகளையும் தொடர்ச்சியாக இழந்து பொருளாதார ரீதியில் பல கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் அபா அமைப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு விழிப்பூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். யானை-மனித மோதல் தொடர்பான மூழு நாள் நிகழ்ச்சியை நடத்தியிருந்தனர்.

இந்த பிரதேசத்தில் உள்ள விகாரையின் சங்க நாயக்கர்கள், விவசாய திணைக்கள அதிகாரிகள், கிராம சேவை அதிகாரிகள், அவர், கிராம மற்றும் கிராமவாசிகள் இதில் கலந்து கொண்டனர். எல்லைக் கிராமம், கிராம வாசிகளிவால் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்பட்டதுடன், கிராமத்துக்குள் நுழையும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் மின் வேலி அமைப்பது சம்பந்தமான முடிவெடுக்கப்பட்டது. மரம் நடுகையும் இடம்பெற்றது.









# இரு பேரிடர்களால் சிக்கலில் தமிழகத்தின் நிதிநிலை: வரவு - செலவு திட்ட உரையில் நிதியமைச்சர் தகவல்

“நடப்பாண்டில் இரண்டு தொடர் பேரிடர்கள் ஏற்படுத்திய பாதிப்பு இந்த சூழ்நிலையை மேலும் மோசமடைய செய்து, மாநில அரசின் நிதி நிலைமையை சிக்கலாக்கியுள்ளன.”

– இவ்வாறு சட்டப்பேரவையில் வரவு -செலவு திட்ட தாக்கலின்போது நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் இந்த நிதியாண்டுக்கான வரவு -செலவு திட்டத்தை தாக்கல் செய்து நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மேலும் உரையாற்றுகையில்,

“சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ஒன்றிய அரசிடம் இருந்து ஒப்புதல் கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுவதால் அத்திட்டத்துக்கான முழு செலவையும் மாநில அரசே தனது நிதியில் இருந்து ஏற்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. இதன் விளைவாக அரசுக்கு நடப்பாண்டில் 9000 கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டு ஜூன் முதல் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு நிறுத்தப்பட்டதால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 20000 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சவால்கள் நிறைந்த சூழ்நிலையில் தான் கடந்த ஆண்டு வரவு -செலவு திட்டம் தாக்கல் செய்யப்பட்டது.

நடப்பாண்டில் இரண்டு தொடர் பேரிடர்கள் ஏற்படுத்திய பாதிப்பு இந்த சூழ்நிலையை மேலும் மோசமடைய செய்து, மாநில அரசின் நிதி நிலைமையை சிக்கலாக்கியுள்ளன.

தேவையான நிவாரணத் தொகை வழங்குவதற்கும் தற்காலிக மற்றும் நிரந்தர சீரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் எதிர்பாராத செலவினங்கள் ஏற்பட்டுள்ளதுடன் குறிப்பிடத்தக்க வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது. பல முறை ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து எந்த ஒரு நிதியையும் மாநில அரசுக்கு இதுவரை ஒன்றிய அரசு வழங்கவில்லை.

மாநிலத்தின் எதிர்பார்களுக்கு நேர்மாறாக மாநில அரசின் நிதி நிலையை மேலும் பாதிக்கும் வகையில் கடன் வாங்கும் வரம்பு குறித்து ஒன்றிய அரசு கடுமையான நிபந்தனைகளை விதிப்பதன் மூலம் வளர்ச்சி திட்டங்களுக்காக நிதி ஆதாரங்களை திரட்டும் மாநில அரசின் அதிகாரத்தையும் ஒன்றிய அரசு கட்டுப்படுத்துகிறது.”

– என்றார்.

# தமிழக காங்கிரஸ் கட்சியில் மாவட்ட நிர்வாகிகள் மாற்றம்

தமிழக காங்கிரஸில் மாநிலத் தலைவர் பதவியில் மாற்றம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், மாவட்ட நிர்வாகிகளும் மாற்றப் பட உள்ளனர் என கூறப்படுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் தனக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய மாவட்ட காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தியை மாற்ற, மாநிலத் தலைமையை கார்த்தி சிதம்பரம் எம்.பி. வலியுறுத்தி வந்தார்.

ஆனால், மாநிலத் தலைவர் கே.எஸ். அழகிரி கண்டு கொள்ளவில்லை. இதனால், அவர் தனது தந்தை ப.சிதம்பரம் மூலம் தேசிய தலைமையிடம் காய் நகர்த்தி, கடந்த ஆண்டு செப்டம்பரில் கே.எஸ்.அழகிரி, முன்னாள் எம்.எல்.ஏ கே.ஆர்.ராமசாமி ஆதரவாளராக இருந்த சத்திய மூர்த்தியை மாற்றிவிட்டு, தனது ஆதரவாளரான சஞ்சய்காந்தியை நியமிக்க நடவடிக்கை எடுத்தார்.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் தங்களுக்கு எதிராக செயல்பட்ட நகர, வட்டார நிர்வாகிகளை கே.எஸ்.அழகிரி ஆதரவில்லாமல் மாற்றுவதில் கார்த்தி சிதம்பரத்துக்கு சிக்கல் இருந்து வந்தது.

தற்போது கே.எஸ்.அழகிரி மாற்றப்பட்டு, மாநிலத் தலைவராக செல்வப்பெருந்தகை நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ப.சிதம்பரத்துக்கு நெருக்கமானவர் என்பதால், சிவகங்கை மாவட்டத்தில் கார்த்தி சிதம்பரத்துக்கு எதிராகச் செயல்படும் நகர, வட்டார நிர்வாகிகள் மாற்றப்படலாம் எனக் கூறப்படுகிறது.



ஏனைய மாவட்டங்களிலும் மீண்டும் ஆசனம் கேட்டு வரும் எம்.பிகள் தங்களுக்கு எதிராக போர்க் கொடி தூக்கி வரும் உள்ளூர் நிர்வாகிகளை மாற்ற மாநிலத் தலைமையிடம் வலியுறுத்த வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால், தேர்தலுக்குள் காங்கிரஸ் கட்சிக்குள் பல்வேறு மாற்றங்கள் வரலாம் எனக் கூறப்படுகிறது.

இது குறித்து சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் கூறுகையில்,

“மாவட்டத் தலைவரை மாற்றினால் தனக்கு எதிர்ப்புக் குறையும் என கார்த்தி சிதம்பரம் நினைத்தார். இதனால் மற்ற நிர்வாகிகளை மாற்ற நினைக்கவில்லை.

ஆனால், அவர்கள் தொடர்ந்து கார்த்தி சிதம்பரத்துக்கு எதிராகச் செயல்படுகின்றனர். இதனால் அவர்களை மாற்ற வாய்ப்புள்ளது. இதேபோல், மற்ற மாவட்டங்களிலும் மாற்றம் இருக்கலாம்,” என்றனர்.

# காங்கிரஸூக்கு ஒதுக்கப்படும் தொகுதியில் கமலின் மக்கள் நீதி மய்யம் கட்சி போட்டி

கடந்த 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் தனித்து களம் கண்ட மக்கள் நீதி மய்யம் கட்சி, 2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் ச.ம.க, ஐ.ஜே.கேயுடனான கூட்டணியில் தேர்தலை சந்தித்தது.

இதையடுத்து வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் கூட்டணி தொடர்பான திரைமறை பேச்சுக்களும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என கூறப்படுகிறது.

குறிப்பாக தி.மு.க, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் கமல்ஹாசன் நெருக்கமாக பயணித்து வருகிறார். ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் தி.மு.க – காங்கிரஸ் கூட்டணிக்கு நிபந்தனையற்ற ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கது.



இந்த நிலையில், மக்களவைத் தேர்தலில் கூட்டணி நிலைபாட்டை இதுவரை கமல் அறிவிக்கவில்லை.

இதனிடையே தி.மு.கவில் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கும் என பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்து வந்த நிலையில், காங்கிரஸ் கட்சிக்கு வழங்கப்படும் தொகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சி போட்டியிட வாய்ப்பிருப்பதாக கட்சி வட்டாரத்தில் பேசப்படுகிறது.

இதுதொடர்பாக மநீம செய்தி தொடர்பாளர் முரளி அப்பாஸ் தெரிவிக்கையில்,

“கூட்டணி தொடர்பாக இதுவரை எந்த பேச்சுவார்த்தையும் தொடங்கப்படவில்லை. மாநிலங்களவை உறுப்பினர் பதவி, ஒரு தொகுதி கேட்கிறோம் என நாள்தோறும் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை பரப்பி வருகின்றனர். விரைவில் கட்சி நிலைப்பாடு குறித்து தலைவர் அறிவிப்பார்” – என்றார்.

# பிரிந்தவர்கள் இணைந்தால்தான் அ.தி.மு.கவுக்கு வெற்றி கிடைக்கும்

## ஓ.பன்னீர்செல்வம் தெரிவிப்பு

பிரிந்து கிடக்கும் சக்திகள் இணைந்தால்தான் அ.தி.மு.கவுக்கு வெற்றி கிடைக்கும் என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

மதுரையில் ஆதரவாளர் ஒருவரின் குடும்ப நிகழ்வில் பங்கேற்ற பின் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“மக்களவைத் தேர்தலுக்கான கூட்டணிப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த தேர்தலில் சசிகலா, டி.டி.வி. தினகரன், நாங்கள் என மூவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதே தொண்டர்களின் விருப்பம்.

எங்களைப் பொருத்தவரை பா.ஜ.கவையும், அதன் மத்திய அரசையும் முழுமையாக ஆதரிக்கிறோம். 10



ஆண்டுகள் சிறப்பான ஆட்சியை பா.ஜ.க. தந்துள்ளதால் ஆதரவைத் தவிர மாற்றுக் கருத்துக்கே இடம் இல்லை.

பிரிந்து கிடக்கும் அ.தி.மு.கவின் சக்திகள் ஒன்றிணைந்தால் தான் அ.தி.மு.கவுக்கு வெற்றி கிடைக்கும்.” – என்றார்.

# மக்களவைத் தேர்தலுக்காக 40 தொகுதிகளிலும் விருப்ப மனுக்களை பெறுகின்றது அ.தி.மு.க.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலுக்காக தமிழகம், புதுச்சேரியின் 40 தொகுதிகளுக்கும் விருப்ப மனுக்கள் ஏற்கப்படும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

“மக்களவைப் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 40 நாடாளுமன்ற மக்களவைத் தொகுதிகளில், அ.தி.மு.க. சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற கழக உடன்பிறப்புகள், தலைமைக் கழகத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை முதல் மார்ச் 01 ஆம் திகதி வரை, தினமும் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை, உரிய கட்டணத் தொகையைச் செலுத்தி அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.



அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் தெளிவாகப் பூர்த்தி செய்து மீண்டும் தலைமைக் கழகத்தில் வழங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுத் தொகுதிக்கு 20 ஆயிரம் ரூபா மற்றும் தனி தொகுதிக்கு 15 ஆயிரம் கட்டணம் செலுத்தி விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.





# காசாவில் கடந்த 24 மணித்தியாலங்களில் இஸ்ரேலின் தாக்குதலில் 127 பேர் பலி!

காசாவில் உள்ள அனைத்து பணயக்கைதிகளையும் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்குள் ஹமாஸ் அமைப்பினர் விடுவிக்காவிட்டால் ரஃபாவில் தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

காசாவின் தெற்கு பகுதிக்குள் தங்களது படைகள் எந்த சந்தர்ப்பத்திலும் நுழையக்கூடுமென தெரிவித்துள்ளது.

அத்துடன், காசா மீது இஸ்ரேல் கடந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொண்ட தாக்குதலில் 127 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதலினால் காசாவின் முக்கிய மருத்துவமனையான நாசர் மருத்துவமனையின் செயற்பாடுகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பழங்குடியினர் இடையில் மோதல்; பப்புவா நியூ கினியில் 55 பேர் பலி!

பப்புவா நியூ கினியின் வடக்கு மலைப்பகுதிகளில் இரண்டு பழங்குடியின குழுவினருக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் சுமார் 55 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எங்கா மாகாணத்தில் இரு பழங்குடியினருக்கு இடையே ஏற்பட்ட இந்த மோதலில் பழங்குடியின குழுவொன்றை சேர்ந்தவர்களால் அங்கு பதுங்கியிருந்தனர் என கூறப்படும் மற்றுமொரு பழங்குடியினர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என அந்த நாட்டு பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ள போதிலும் சம்பவம் தொடர்பான முழுமையான தகவல்கள் கண்டறியப்படவில்லை என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்தப் பகுதியில் நில உரிமை தொடர்பாக நீண்ட காலமாக, சில பழங்குடியின குழுவினர்களுக்கு இடையில் மோதல் இடம்பெற்று வருவதாக அந்த நாட்டு பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.








# பிரித்தானியாவில் 03 குழந்தைகள் கொலை: தாய் கைது!

பிரித்தானியாவின் பிரிஸ்டலில் உள்ள வீடொன்றில் மூன்று குழந்தைகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குழந்தைகளின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

08 மாதங்கள் மற்றும் 04 வயது, 06 வயதுடைய மூன்று குழந்தைகளே கொலைசெய்யப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட குழந்தை களின் தாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்




# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரின் மறைவு: அஞ்சலி செலுத்திய 400 பேர் கைது

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி விளாடிமீர் புடினை கடுமையக எதிர்த்து வந்தவருமான அலெக்ஸி நவால்னியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்திய 400 இற்கும் மேற்பட்டோர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னியின் கடந்த மரணம் ஒரு படுகொலை என்று அவரது செய்தித் தொடர்பாளர் கீர் யார்மிஷ் சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.


மேலும், அவரின் உடலை வழங்கு வதற்கு அதிகாரிகள் வேண்டுமென்றே தாமதம் செய்து வருகின்றனர் என குற்றச்சாட்டுக்களும் எழுந்துள் என.

இந்த நிலையில், நவால்னியின் உடல் அவரின் குடும்பத்திற்கு எப்போது ஒப்படைக்கப்படும் என்பது குறித்தும் உறுதியான தகவல் இன்னும் வெளியிடப்படவில்லை.

அத்துடன், நவால்னியின் மறை வுக்கு ரஷ்யாவின் பல நகரங்களில் உள்ள நினைவிடங்களில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நடைபெற்றன.

அதன்போது, அந்த நிகழ்வுகளில் பங்கேற்ற 400 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்நாட்டின் மனித உரிமை அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.





# இலங்கை இன்னும் நான்கு வருடங்களில் வங்குரோத்து நிலைமைக்குச் செல்லும்!

## மின்சார சபையின் நிலைப்பாடு தான் காரணம் என்கிறார் சம்பிக்க

நாட்டில் யார் ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்டாலும் எதிர்வரும் 2028 ஆம் ஆண்டில் நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை அடையும் என்று நாடாளு மன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையால் சமர்ப் பிக்கப்படும் புள்ளி விவரத் தகவல்கள் குறித்து விஞ்ஞான பூர்வமான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிழையான தகவல்களை வெளியிட்டுள் ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது



என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் தங்களது கணித அறிவைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபடு கின்றனர் என்றும் குற்றம் சுமத்தியுள் ளார்.

இதேவேளை வியட்னாம், பங்களா தேஷ் மற்றும் இந்தியா போன்ற நாடுக ளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையின் மின்சாரக் கட்டணங்கள் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம் அதிகமாக அறவீடு செய்யப்படுவதால் கைத்தொழிற் துறை பாதிக்கப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொ ருள் விலை அதிகரிப்பு காரணமாக எதிர்வரும் 2028 ஆம் ஆண்டில் மீண்டும் நாடு வங்குரோத்து அடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மின்சார சபையின் செயற் பாடுகள் குறித்து உன்னிப்பாக அவதா னித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.




# 10 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப் பொருளுடன் 2 யுவதிகள் கைது!

பிலியந்தலையில் இரு யுவதிகள் 10 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸில் இருந்து பெரியளவிலான போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் பிலியந்தல சித்தும் அல்லது சென்டா என்ற நபரின் கும்பலுடன் தொடர்புடைய 2 யுவதிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சோதனையின் போது, போதைப் பொருள் உட்கொள்ள வந்த மற்றும் போதைப்பொருள் உட்கொண்ட இரு இளைஞர்களையும் கைது செய்துள் ளனர் என்றும் பொலிஸார் தெரிவித் தனர்.

சந்தேகநபர்களுடன், 250 கிராம் ஹஷிஷ் போதைப்பொருள், 15 போதை மாத்திரைகள், இலத்திரனியல் தராசு, சுருட்டு சுற்றுவதற்கு பயன்படுத்தப்படும் காகிதம், 8 கையடக்கத் தொலை பேசிகள், 2 லைட்டர்கள் மற்றும் போதைப் பொருள் பொதி செய்யப் பயன்படுத்தப்படும் பொலத்தீன் என் பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

# திருட்டுக் கும்பல்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கும் பொலிஸ்!

நாடாளவிய ரீதியில் இரவு நேரங் களில் வீடுகளுக்குள் புகுந்து பொருள் களை திருடும் கும்பல் தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த கும்பல்களை கண்டுபிடிக்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களின் உதிரி பாகங்களைத் திருடுவதில் இந்தக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

நள்ளிரவு நேரங்களில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

செல்லப் பிராணிகளுக்கு விஷம் கொடுத்து இந்த கும்பல் இந்த திருட்டில் ஈடுபடுகின்றனர் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொலி ஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிராந்திய மாநாடு கொழும்பில் இன்று!

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37 ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய மாநாடு இன்று (19) கொழும்பில் ஆரம்பமாகி யுள்ளது. இந்த மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் 35 நாடுகளைச் சேர்ந்த விவசாய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட 300 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கியூ டோங்யு உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் குழுவும் இந்த மாநாட் டில் கலந்து கொள்ளவுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல்; அடுத்த வாரங்களில் சேவை தொடங்கும்!

## இலங்கைக்கான இந்திய தூதர் சந்தோஷ் ஜா நம்பிக்கை




எதிர்வரும் வாரங்களில் நாகப் பட்டினம் – காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பமாகும் என்று இலங் கைக்கான இந்திய தூதர் சந்தோஷ் ஜா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், தலைமன்னார் மற்றும் ராமேஸ்வரம் இடையே பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் தொடங்கு வதற்கான முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய தூதர் காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் தலைமன்னார் கடற்பகுதிக்கு விஜயம் செய்த போது, இரு நாடுகளுக்கும் இடையிலான கப்பல் சேவைகளை துரிதமாக மீள ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ளார்.

தூதர் சந்தோஷ் ஜா பெப்ரவரி 15 முதல் 17 வரை இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு தனது முதல் உத்தி யோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டி ருந்தார்.

இதன் போது அவர் பங்கேற்ற பல வேறு நிகழ்வுகள், வடக்கு மாகாணத் துடனான இரு தரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பை உறுதிப் படுத்தியது என்று தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 2023 ஜூலையில் வெளியிடப்பட்ட இருதரப்பு பொருளாதார பங்காளித்துவ தொலைநோக்கு ஆவணத்தின் மையக் கருப்பொருளான இணைப்பு முயற்சிகளை மேலும் முன் னெடுப்பதற்கு தூதர் இந்த பயணத்தின் போது விசேட கவனம் செலுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமணமாகி மூன்று மாதங்களில் மின் தாக்கி உயிரிழந்த இளைஞன்!



கொழும்பின் புறநகர் பகுதியில் வாடகை அறையில் தங்கியிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்த இளைஞன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் திருமணமான இந்த இளைஞன், மூன்று நாள்களுக்கு முன்னர் தனது மனைவியுடன் கொட்டாவ – பாடசாலை மாவத்தையில் உள்ள வீடொன்றில் அறையொன்றை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்துள்ளார்.

இந்த இளைஞன் தங்கியிருந்த வீட்டில் இயங்காமல் இருந்த மின்விசிறியை சீர் செய்யும் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரிப் சுவிட்ச் செயலிழந்த மின் விநியோகத்தில் இருந்து பாதுகாப்பற்ற மின்சாரத்தைப் பயன்படுத்தியதால் மின்கசிவு ஏற்படக் காரணம் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலத்தின் பிரேத பரிசோதனை ஹோமாகம வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. வஸ்கடுவ பிரதேசத் தைச் சேர்ந்த கவிஷ்க விஜயதுங்க என்ற 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# காரைநகர் கப்பல் கட்டும் நிறுவனத்தில் உருவான அதிசொகுசு சுற்றுலாக் கப்பல்

## இன்று பரீட்சார்த்த பயணம் வெற்றிகரமாகப் பூர்த்தி



- ந.லோகதயாளன்-

காரைநகர் கப்பல் கட்டும் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட அதி சொகுசு சுற்றுலாக் கப்பல் பர்மாவிற்கு (மியன்மாருக்கு) வழங்கும் வகையில் இன்று பரீட்சார்த்த பயணத்தை ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணதில் காரைநகரில் உள்ள ஆயாயளநெ ஆயசஷைநெ என்ற கப்பல் கட்டும் தொழில்சாலையில் தயாரிக்கப்பட்ட இந்த அதிசொகுசு சுற்றுலாக் கப்பல் பர்மா நாட்டுக்கு வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

தயாரிப்பின் பின்னர் பரீட்சார்த்த பயணத்தை காரைநகர் துறைமுகத்திலிருந்து இன்றைய தினம் அது வெற்றிகரமாக முடிந்தது.

சூரிய மின் சக்தி வசதியை கொண்டதான இந்த சொகுசு கப்பல் இலங்கையில் – குறிப்பாக வடக்கில் – யாழ்ப்பாணம் கரைநகரில் உள்ள ஓர் தொழில்சாலையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# அண்ணனின் தாக்குதலில் காயமுற்ற தம்பி மரணம்!

தலங்கம பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கிடையே ஏற்பட்ட தகராறில் இளைய சகோதரன் தாக்கப்பட்டு தலங்கம மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளான் எனத் தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் வசித்து வந்த வீட்டினுள் எலி ஒன்று புகுந்ததாலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த இளைய சகோதரன் பத்தரமுல்லை தலங்கம பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய ஓய்வு பெற்ற கணக்காளர் என்பதுடன் இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

மூத்த சகோதரன் திருமணமாகாமல் வீட்டில் வசித்துள்ள நிலையில் உயிரிழந்த இளைய சகோதரனின் பிள்ளைகளும் மனைவியும் வெளியே சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# இலங்கைக்குக் கஞ்சா கடத்த முயன்ற மூவர் தமிழகப் பொலிஸாரினால் கைது

இலங்கைக்குக் கஞ்சாவைக் கடத்த முயன்ற நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் தமிழகப் பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

364 கிலோ கஞ்சாவையும் தாம் கைப்பற்றியுள்ளனர் எனத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட மூவரும் 37 ,38 ,29 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் கஞ்சாவைக் கண்ணாடி ஃபைபர் படகு மூலம் கடல் வழியாக இலங்கைக்குக் கடத்த திட்டமிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவர் மீதும் போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

திங்கட்கிழமை | 19/02/2024

**அரசியல் பிரசார நடவடிக்கைகளில் செயற்கை நுண்ணறிவுக் கருவிகள்!**

**கனேடிய அதிகாரிகள் எச்சரிக்கை**

அரசியல் பிரசாரங்களில் செயற்கை நுண்ணறிவு கருவிகளின் பயன்பாடு தொடர்பில் கனேடிய அதிகாரிகள் எச்சரிக்கை C2

# செங்கடல் பாதுகாப்பை உறுதி செய்வதில் சீனப் பங்களிப்பைக் கோருகிறது கனடா!

**செங்கடல் பாதுகாப்பை உறுதி செய்வதில் சீனா முக்கிய பங்காற்ற வேண்டும் என கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார்.**

**ஏனெனில், செங்கடலில் ஹௌதிகளால் வர்த்தக கப்பல்களை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்களில் சீன வர்த்தக கப்பல்களும் பாதிக்கப்படுகின்றன எனச் சுட்டிக் காட்டிய அமைச்சர் ஜொலி, சர்வதேச தடைகளை மீறி ரஷ்யாவுக்கு உதவி வருவதையும் சீனா நிறுத்த வேண்டும் எனக் கோரியுள்ளார்.**



சீன வெளிவிவகார அமைச்சர் வேங்யியுடனான சந்திப்பு தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் ஜொலி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரேனில் நீடிக்கும் யுத்தத்தின் மத்தியில் ரஷ்யாவுக்கு எதிரான மேற்கத்தைய நாடுகளின் தடைகளை உறுதி செய்ய சீனா ஒத்துழைக்க வேண்டும் எனவும் தாம் கோரினார் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் மியுனிச் நகரில் இடம்பெற்று வரும் மியுனிச் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டதன் பின்னரேவ அமைச்சர் ஜொலி இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்து கருத்து தெரிவித்த அமைச்சர், பல வருடங்களாக கனடாவுடன் நீடித்த இராஜதந்திர பதற்றங்களில் இருந்து நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான தேவை குறித்து வலியுறுத்தினார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கியூபெக்கில் ஆசிரியர்களுக்கான வேதனத்தை அதிகரிப்பதால் நிதிப் பற்றாக்குறை ஏற்படுமாம்



ஆசிரியர்களுடனான உடன்படிக்கையின் விளைவாக கியூபெக் மாநிலத்தின் வரவு – செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதிப் பற்றாக்குறை ஏற்படக் கூடும் என மாநில அரசு எதிர்வுகூறியுள்ளது.

மாநிலத்தின் பொதுத் துறையில் ஆசிரியர்களின் பணியாற்றும் சூழலையும், சம்பளத்தையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள பெரும் முதலீடு குறித்து தாம் பெருமையடைகின்ற அதேவேளை, அதற்காக அதிக செலவிட வேண்டியுள்ளது என கியூபெக் மாநில முதல்வர் பிரான்சுவா லெகால்ட் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (பெப்ரவரி 18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த முதல்வர் லெகால்ட், கல்வித் துறையுடனான இந்த ஒப்பந்தம் மாநிலத்தின் வரவு – செலவுத் திட்டத்தில் பெரும் நிதிப் பற்றாக் குறைக்கு வழியமைக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொது சேவைகளில் பெருமளவில் முதலீடு செய்வதற்கு நாம் எடுத்துள்ள தெரிவு குறிப்பிடத்தக்க நிதிசார்ந்த விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் வரவு – செலவுத் திட்டம் மாநில அவையில் சமர்ப்பிக்கப்படும் போது இந்த நிதிப் பற்றாக்குறை குறித்த தகவல் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த நிதிப் பற்றாக்குறை, சேவைகள் இடைநிறுத்தும் அல்லது வரி அதிகரிப்புக்கு வழிகோலாது எனவும் முதல்வர் உறுதியளித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முதல்வர் லெகோல்ட்டுடன், மாநில கல்வி அமைச்சர் பேர்னாட் டிரெய்ன்வில் மற்றும் மாநில திறைசேரி தலைவர் சோனியா லெபெல் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.




# வாரஇறுதிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து
# நோர்த்யோர்க்கில் கண்காணிப்புத் தீவிரம்!

நோர்த்யோர்க் பகுதியில் கடந்த வாரஇறுதியில் அடுத்தடுத்து இடம் பெற்ற இரு துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களைத் தொடர்ந்து, கண் காணிப்பு நடவடிக்கைகளை முடுக்கி யுள்ளதாக பொலிஸார் தெரிவிக் கின்றனர்.


இந்தப் பகுதி மக்களின் பாது காப்புக்காக நோர்த் யோர்க்கின், டிரிப் வூட் சமூக நிலையத்தில் விசேட பொலிஸ் சாவடி ஒன்று அமைக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

இது குறித்து எக்ஸ் சமூக தளத்தில் தகவல் பகிர்துள்ள பொலிஸார், இந்தப் பகுதியில் ஏதேனும் சந்தேகத்திற் கிடமான நடவடிக்கைகளை அவதா னித்தால் உடனடியாக 911 என்ற இலக்கத்தை அழைக்குமாறும் கோரியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை மற்றும் சனிக் கிழமை ஆகிய தினங்களில் இடம்பெற்ற இருவேறு துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களில், ஒருவர் உயிரிழந்த மையுடன், இளம் சிறுவர் ஒருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

இந்த இரு சம்பவங்களிலும், பஸ் ஸிற்காக காத்திருந்தவர்களே துப் பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி யுள்ளனர்.

ஒரே சந்தேகநபரே இந்த இரு சம்பவங்களிலும் சம்பந்தப்பட்டிருக்க லாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.




**அரசியல் பிரசார...**

**(C1 ஆம் பகத்த் தொடர்ச்சி)**

வெளியிட்டுள்ளனர்.

வாக்காளர்களை விரைவாக வாக்க ளிக்க ஊக்குவிப்பதற்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது தொடர்பில் அமெரிக்காவின் தேர்தல் பிரசார செயற்பாட்டு நிறுவனங்கள் கவனம் செலுத்தி வருகின்ற நிலை யில், கனடாவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் செயற்கை நுண் ணறிவு கருவிகளின் பயன்பாடு மிகவும் ஆரம்ப நிலையில் இருப்ப தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக அளவில் தேர்தல் பிரசாரங் களில் செல்வாக்கு செலுத்தும் கருவியாக செயற்கை நுண்ணறிவு கருவி மாறிவருவதாக மாநில மற்றும் மத்திய மட்டங்களில் கொன்சர்வேட்டிவ் கட்சியின் தேர்தல் பிரசாரங்களை ஒழுங்கமைத்து வரும் அவுட்ஹவுஸ் நிறுவனம் தெரிவிக்கின்றது.

டிஜிட்டல் தேர்தல் பிரசாரச் செயற் பாட்டாளர்கள், தங்கள் பிரசார செயற் பாடுகளில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துகின்ற போதிலும், கனே டிய சூழலில் மிகவும் நுட்பமான வகை யில் அதன் பயன்பாடு இதுவரை ஆரம்பிக்கவில்லை எனத் தெரிய வருகின்றது.

கனடாவின் பிரதான கட்சிகளுக் கான தேர்தல் பிரசார நடவடிக்கை களை முன்னெடுக்கும் நிறுவனங்கள் பாரம்பரிய தேர்தல் பிரசார முறை களையே தாம் நம்புவதாக தெரிவித் துள்ளன.




# பச்சைவீட்டு வாயுக்களை நிலத்தடியில் சேமிக்கும் திட்டம் பற்றி கனேடியப் பூர்வீகக் குடிகள் கேள்வி

பல மில்லியன் தொன்கள் அளவுடைய பச்சைவீட்டு வாயுக்களை நிலத்தடியில் சேமிக்கும் தொழில்துறை மற்றும் அரசாங்கத்தின் திட்டம் குறித்த மேலதிக விவரங்களை கனேடிய பூர்வீகக் குடிகளின் தலைவர்கள் கோரியுள்ளனர்.

அல்பேர்ட்டாவின், ஏழு பூர்வீகக் குடி பிரிவுகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளனர்.

தமது பாரம்பரிய நிலங்களுக்கு அருகில் இந்த பச்சைவீட்டு வாயு சேமிப்பு இடம்பெறுவதாகச் சுட்டிக் காட்டும் இந்தத் தலைவர்கள், நிலத்திற்கு அடியில் கார்பன் வாயுவைச் செலுத்துவதால், எமது ஆறுகளுக்கும், நிலத்தடி நீர் சேமிப்புகளுக்கும் எவ்வித பாதிப்பு ஏற்படக் கூடும் எனத் தமக்குத் தெரியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திட்டம் சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் ஆகியவற்றுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் ஆபத்து இருப்பதால், இது குறித்து மேலதிக விடயங்களை அறிந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தத் திட்டம் எட்டு பூர்வீகக் குடி பிரிவுகளையும் உள்ளடக்கியது என்பதால், அவர்கள் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தத் திட்டம் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாகவும், பூர்வீகக் குடிப் பிரிவுகளின் பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் இது குறித்து கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக, இந்த காபன் உட்செலுத்துகை திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் தெரிவிக்கின்றது.

செயல்திட்ட நடைமுறைப்படுத்தல் குறித்த விவரங்கள் அடுத்த மாத இறுதியில் வெளியாகும் என அந்த நிறுவனம் குறிப்பிடுகின்றது.

# வீதியில் சென்ற இருவர் உட்பட நால்வர் எட்டோபிகொக் பகுதி விபத்தில் காயம்




எட்டோபிகொக் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில், வீதியில் நடந்து சென்ற இருவர் உள்ளடங்கலாக நால்வர் காயமடைந்துள்ளனர்.

வீதியில் பயணித்த வாகனம் ஒன்று வழிதவறி வீதியில் பயணித்தவர்கள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனத்தின் சாரதியும், அவருடன் பயணித்தவரும் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்ற நிலையில், அவர்களது காயங்கள் உயிருக்கு ஆபத்தற்றவை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, காயமடைந்த வீதியில் பயணித்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாகவும், மற்றையவர் ஆபத்தான நிலையை கடந்துவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அவசர நிலையை நடைமுறைப்படுத்தியமைக்கான விளக்கத்தைத் தர கனடா மத்திய அரசு தவறியது!

அவசரகாலநிலைகள் சட்டத்தை நடைமுறைப் படுத்தியமை குறித்து பதிலளிப்பதற்கு கனேடிய மத்திய அரசாங்கம் தவறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2022ஆம் ஆண்டில் முதன்முறையாக பெடரல் அரசாங்கத்தினால் அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் நீதிபதி போல் ரூலோ தலைமையிலான குழு முன்வைத்த முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுக்கு பதிலளிப்பதற்கு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட காலக்கெடு, அரசாங்கத்தின் பதில் கிடைக்காமலேயே கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2022ஆம் ஆண்டு கொவிட்-19 கட்டுப்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தின் போது பொது ஒழுங்கு அவசர நிலையை அறிவிக்கும் அரசாங்கத்தின் முடிவைப் பற்றிய தனது இறுதி அறிக்கையை நீதிபதி ரூலோ கடந்த ஆண்டு வெளியிட்டிருந்தார்.

இந்தச் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தியமை நியாயமானது என ரூலோவின் அறிக்கை கண்டறிந்த போதிலும், எதிர்கால நடைமுறைப்படுத்தல்களைக் கவனத்தில் கொண்டு 56 பரிந்துரைகளை அவர் இந்த அறிக்கையில் முன்வைத்திருந்தார்.

அந்த பரிந்துரைகளுக்கு 12 மாதங்களுக்குள் பதிலளிக்கவும், அவற்றில் எது அமுல்படுத்தப்படும் என்ற. தெரிவிக்கவும், காலக்கெடுவை வழங்கவும் அவர் அரசாங்கத்திற்கு உத்தரவிட்டிருந்தார்.



விரைவில் இது குறித்து அரசாங்கத்தின் பதில் வெளியிடப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. இருந்தபோதிலும், காலக்கெடுவை தவறவிட்டமை தொடர்பில் அமைச்சினால் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எனினும், அரசாங்கம் குறித்த காலக்கெடுவுக்குள் பதிலளிக்க வேண்டும் என்கிற சட்டரீதியான பிணைப்பு எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அரசாங்கத்திற்கு எவ்வித எதிர்வினைகளும் ஏற்படாது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# வில்லியம் ஹோலின் மனத் தைரியத்தை கௌரவிக்கிறது நோவா ஸ்கோட்சியா!

## மாநிலங்களவையில் இன்று மரியாதை

பிரித்தானியாவின் அதியுயர் இராணுவ அங்கீகாரமான 'விக்டோரியா குரொஸ்' எனப்படும் விருதை வென்ற வில்லியம் ஹோலின் தைரியத்தை நோவா ஸ்கோட்சியா கௌரவிக்கவுள்ளது.

1857ஆம் ஆண்டில் கற்பனைக்கு எட்டாத இனவாதம் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் போர்க்களத்தில் பிரித்தானிய முடிக்காக போரிட்டு, 'விக்டோரியா குரொஸ்' அங்கீகாரத்தைப் பெற்ற முதல் கறுப்பினத்தவராக வில்லியம் ஹோல் பெருமைப் பெற்றார்.

தமது வருடாந்த மரபு நாளில், இன்று திங்கட்கிழமையன்று (பெப்ரவரி 19) நோவா ஸ்கோட்சியா மாநிலமானது, மாநிலங்களவையில் வில்லியம் ஹோலுக்கான மரியாதையை அளிக்கவுள்ளது.

1827ஆம் ஆண்டில் நோவா ஸ்கோட்சியாவின் ஹோர்ட்டன் பிளப்ஸ் பகுதியில் வில்லியம் ஹோல் பிறந்தார்.



'வில்லியம் ஹோலின் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கும் நாங்கள், நோவா ஸ்கோட்சியா பகுதியில் கறுப்பினத்தவர்களின் வாழ்க்கைப் பாதையையும், சர்வதேச மட்டத்தில் அது ஆற்றியுள்ள பங்கினையும் நினைவில் கொள்ள வேண்டும்' என நோவா ஸ்கோட்சியாவுக்கான கறுப்பின கலாசார நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஸல் குரொஸ் தெரிவித்துள்ளார்.

1995ஆம் ஆண்டு கனேடிய நாடாளுமன்றில் பெப்ரவரி மாதத்தினை கறுப்பின வரலாற்று மாதமாக அங்கீகரிக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. அதன் பின்னர், 2008ஆம் ஆண்டில் செனட் சபைக்கு நியமிக்கப்பட்ட முதல் கறுப்பினத்தவரான டொனால்ட் ஒலிவரால் முன்வைக்கப்பட்ட கறுப்பின கனேடியர்களின் பங்களிப்புக்களை மற்றும் பெப்ரவரியை கறுப்பின வரலாற்று மாதமாக அங்கீகரிப்பதற்கான பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது முதல், ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதத்தில் கனடா முழுவதிலும் கறுப்பின வரலாற்று மாத நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கனடாப் போக்குவரத்துப் பாதுகாப்புச் சபை ரயில் தடம் புரண்டமை குறித்து விசாரணை

பிரிட்டிஷ் கொலம்பியா – அல்பேர்ட்ட எல்லையில் பீல்ட் பகுதிக்கு அருகே கடந்த சனிக்கிழமையன்று (பெப்ரவரி 17) ரயில் தடம்புரண்டமை தொடர்பில் கனடாவின் போக்குவரத்துப் பாதுகாப்புச் சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சரக்கு ரயில் தடம்புரண்டமையால் இரண்டு ரயில் பெட்டிகள் விபத்துக்குள்ளாகின. எனினும், காயங்கள், தீ விபத்துகள் அல்லது கசிவுகள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவல்களும் இல்லை எனக் கனடாவின் போக்குவரத்துப் பாதுகாப்புச் சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலுடன், நகர்ந்து வந்த ரயிலின் பெட்டி மோதியமையே விபத்துக்கான காரணமாக இருக்க வேண்டும் என ஆரம்ப விசாரணைகளில் அறிய வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வார இறுதியில் இதே பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் ரயில் நிலைய ஊழியர்கள் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




# நியூபவுன்லாந்தில் ஐந்து திடீர் மரணங்களுக்கு போதைமருந்துகளின் பாவனையே காரணம்?

## பொலிஸார் சந்தேகம் எச்சரிக்கை தெரிவிப்பு

அண்மையில் இடம்பெற்ற ஐந்து திடீர் மரணங்களைத் தொடர்ந்து சட்டவிரோத போதை மருந்துகளின் பயன்பாடு தொடர்பில் நியூபவுன்லாந்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நியூபவுன்லாந்து பொலிஸாரினால் ஞாயிற்றுக்கிழமை (பெப்ரவரி 18) வெளியிடப்பட்ட அறிக்கையில், நியூபவுன்லாந்து மற்றும் லெப்ரடோர் பகுதிகளில் அதிகரித்துள்ள சட்டவிரோத போதைமருந்துகளின் பயன்பாடு தொடர்பில் கரிசனை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த வாரத்தில் மாத்திரம் ஐவர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை இந்த மரணங்களுக்கான காரணங்கள் கண்டறியப்படவில்லை.

சட்டவிரோத மருந்துகள் மற்றும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய போதை மருந்துகளின் பயன்பாடு அதிகரிப்பு இதற்கான காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.